**Media:** Tamil Murasu
**Date:** 29 July 2024
**Page:** 3



# தன்னலமற்ற தன்னிரகற்ற தாதிமைத் துறை

*இரவுபகலாகப் பணியில் ஈடுபட்டாலும் கடுமை காட்டாமல் புன்னகை மாறாமல் நோயாளிக் கவனிப்பிலும் மருத்துவச் சேவையிலும் மும்முரம் காட்டும் தாதியரைக் கொண்டாடும் தாதியர் தினம் சிங்கப்பூரில் ஆகஸ்ட் 1ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. இத்துறையில் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்காற்றும் இருவரைச் சந்தித்தது தமிழ் முரசு.*



தமிழ், மலாய், ஆங்கிலம் பேச முடிவதால் அந்தந்த மொழி பேசும் முதியோர் தம்மிடம் இயல்பாகப் பழக முடிவதாகச் சொன்னார் திலகவதி. **படம்: திலகவதி**



ராஃபிள்ஸ் மருத்துவமனையில் மத்திய சுத்திகரிப்பு விநியோகப் பிரிவில் (Central Sterile Supply Department) திரு பிரவீன் சந்திரன், 25, பணியாற்றுகிறார். **படம் : கி.ஜனார்த்தனன்**

## சிறு புன்னகையில் பேரின்பம் காண்கிறார்

**லாவண்யா வீரராகவன்**

தமக்காக வயது முதிர்ந்த நல்லுள்ளங்கள் காத்திருப்பார்கள் என்ற நினைவுடன் அதிகாலை 3.30 மணிக்குத் தமது நாளைத் தொடங்குகிறார் தாதி திலகவதி மனோகரன்.

ஜோகூர் பாருவில் வசிக்கும் 33 வயது திலகவதி, கடந்த 11 ஆண்டுகளாக சிங்கப்பூரிலுள்ள ‘நோய்வாய்ப்பட்ட வயதானவர்களுக்கான சங்கம்’ (Society for the Aged Sick) தாதிமை இல்லத்துக்கு வந்து செல்கிறார்.

பள்ளிப் படிப்பை முடித்த கையுடன் எந்த எதிர்பார்ப்புமின்றி தாதியர் படிப்பை மேற்கொண்ட திலகவதி, வேலைப் பயிற்சிக்குச் சென்றபோது தாதியரின் கனிவான பண்பு, மென்மையான அணுகுமுறை, சேவை மனப்பான்மை உள்ளிட்டவற்றைக் கண்டு வியந்தார். தாமும் அத்தகைய ஒரு தாதி ஆக வேண்டும் என உறுதி பூண்டார்.

அதனை இன்றுவரை கடைப்பிடித்து வருவதாகக் கூறிய அவர், “நான் கவனிக்கும் முதியவர்கள் பொழியும் அன்புக்கு ஈடு இணையே இல்லை,” என்றார்.

“சுறுசுறுப்பாக இருந்த ஒருவர், திடீரென மயங்கி விழுந்து பக்கவாத நோய்க்கு ஆளானார். சிகிச்சைக்குப் பிந்திய பராமரிப்புக்காக எங்களிடம் வந்தார். தமது நிலை குறித்த உணர்வுகள் நாளடைவில் மன அழுத்தமாகவும் வெறுப்பாகவும் மாறியது. யாரிடமும் பேசாமல் தனித்தே இருந்த அவர் மீது அன்பு காட்டி அரவணைத்தேன். நாளடைவில் அவர் முகத்தில் புன்னகை தெரிந்தது. ஒருநாள் என்னை அருகில் அழைத்து, என் கையை இறுகப் பற்றித் தமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். அந்தத் தருணத்தை என் வாழ்வில் மறக்க முடியாது,” என்றார் திலகவதி.

“இதுபோன்ற சிறு சைகைகள், எனக்குக் கிடைக்கும் பெரும் பேறு,” என்றார்.

தமது வாழ்வின் இறுதிக்கட்டத்தை இல்லத்தில் கழித்த மற்றொரு நோயாளி, தமது கடைசி நாளன்று தம்மைத் தேடியதையும் இறக்கும் முன் கடைசி மூன்று மணி நேரத்தைத் தம்மோடு செலவிட்டதையும் நெகிழ்ந்தபடி நினைவுகூர்ந்தார் திலகவதி.

தமது விடுப்பு நாள்களில்கூட தம்மைச் சிலர் தேடுவதாகக் குறிப்பிட்ட திலகவதி, இல்லவாசிகளைத் தம்முடைய குடும்பமாகவே தாம் கருதுவதாகச் சொன்னார்.

இந்தப் பணியில் சவால்களும் இருக்கவே செய்வதாகக் கூறினார் அவர்.

“நோயாளிகளுக்கு ஏற்படும் அழுத்தம், நோய் காரணமாக ஏற்படும் எரிச்சல், மறதி, குழப்பம் ஆகியவை பல நேரங்களில் கோபமாக வெளிப்படும்,” என்றார். அந்நேரத்தில் அதற்கான காரணத்தைக் கண்டறிந்து, அதைச் சமாளிக்கத் தாம் முயல்வதாகச் சொன்னார்.

நான்கு வயது மகளையும் ஒரு வயது மகனையும் தம் தாயாரின் பராமரிப்பில் விட்டு வரும் இவர், அந்தச் சிரமங்களைத் தமது பணி தரும் மனநிறைவு மூலம் ஈடுசெய்வதாகச் சொன்னார்.

கொள்ளைநோய்க் காலத்தில் மூன்று மாதக் குழந்தையாக இருந்த மகளை விட்டு, ஓராண்டு சிங்கப்பூரில் பணியாற்றியது வாழ்வில் சந்தித்த மிகக் கடினமான நெருக்கடி என்று நினைவுகூர்ந்த இவர், தமது உழைப்பு, பொறுமை, உறுதி ஆகியவற்றைக் கண்டு தம்முடைய பிள்ளைகளும் பின்பற்றுவார்கள் என்ற நம்பிக்கையில் உள்ளார்.

மக்கள் இயன்ற அளவு தாதியருக்குத் தங்கள் நன்றியையும் பாராட்டுகளையும் சிறு புன்னகை மூலமாவது வெளிப்படுத்த வேண்டும் என்றும் கோரினார்.

lveer@sph.com.sg

## கருவிகளின் சுத்திகரிப்புக்குப் பங்காற்றுகிறார்

**கி. ஜனார்த்தனன்**

தாதிமைத் துறையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை ஆவலுடன் கையாள்வதுடன் இத்தொழிலை அதிகம் நேசிப்பவர் 25 வயது பிரவீன் சந்திரன்.

சிங்கப்பூரின் தாதியரில் கிட்டத்தட்ட 10 விழுக்காட்டினர் மட்டுமே ஆண்கள். அவர்களில் பிரவீனும் ஒருவர்.

தொடக்கத்தில் விலங்குநல மருத்துவர் ஆக ஆசைப்பட்ட பிரவீன், உயர்நிலைப் பள்ளியின் போது தாதிமைத் துறை பற்றிய விளக்க உரையைச் செவிமடுத்து அத்துறையில் ஆர்வம் கொண்டார்.

பிரவீனின் இந்த முடிவை ஏற்க அவரின் தந்தை ஆரம்பத்தில் தயங்கினார்.

ஆனால், காலப்போக்கில் பிரவீனின் தாதிமைத் திறன்களால் தம்முடைய குடும்பத்தாரது நன்மதிப்பைப் பெற்றார்.

“2020ல் என் தந்தை காரை ஓட்டிச்சென்றபோது அவருக்குத் திடீரெனப் பக்கவாதம் ஏற்பட்டது. தாதிமைக் கல்வி பயின்றதால் நிலைமையை உடனே கண்டறிந்து தக்க சமயத்தில் அவரைக் காப்பாற்ற முடிந்தது,” என்றார் பிரவீன்.

ஆறு ஆண்டுகளாக இந்தத் துறையில் உள்ள பிரவீன், தற்போது ராஃபிள்ஸ் மருத்துவமனையில் மத்திய சுத்திகரிப்பு விநியோகப் பிரிவில் பணியாற்றுகிறார். திறந்த அறுவை சிகிச்சைக்கான கருவிகள், துணைக் கருவிகள் எனப் பல முக்கியமான பொருள்களைக் கிருமிநீக்கத்தின்வழி தூய்மையாக வைத்திருக்கும் பெரும் பொறுப்பு இந்தப் பிரிவுக்கு உள்ளது.

இப்பிரிவில் பணியாற்றும் தாதியர், நோயாளிகளுடன் அடிக்கடி நேரடியாக உரையாடும் வாய்ப்பைப் பெறுவதில்லை.

கெடுபிடியான வழிமுறைகளுக்கு உட்பட்டு, படிப்படியாகச் செய்ய வேண்டிய இந்தக் குறிப்பிட்ட வேலைக்கு ஆய்வுத் திறனும் தீர யோசித்து முடிவெடுக்கும் திறனும் தேவைப்படுவதாகக் கூறினார்.

இக்கால நடைமுறைக்கு ஏற்ப, எந்நேரமும் வேலையைப் பற்றி யோசிப்பதற்குப் பதிலாக வேலை வேறு, தனிப்பட்ட வாழ்க்கை வேறு என்பதில் திண்ணமாக உள்ளார் பிரவீன்.

“ஓய்வு மனதிற்குத் தெளிவைத் தரும். வேலையைச் சரியாகச் செய்வதற்கு அந்தத் தெளிவு தேவை. வேலைக்கு அப்பால் வாழ்க்கை இருப்பதால் இயன்றவரை வேலையிடத்தில் அதிக நேரம் தங்க வேண்டாம் என்று இளம் ஊழியர்களிடம் கூறுவேன்,” என்று அவர் கூறினார்.

பிறர் தம்மைப் பின்பற்றவேண்டும் என்ற எதிர்பார்ப்பை விடுத்து பிறருக்கு வழிகாட்டும் திறனை இந்த இளம் தாதி வளர்த்துக்கொள்ள விரும்புகிறார்.

“தாதிமைத் துறை மேன்மேலும் வளர்ந்துகொண்டே இருக்கும். கற்பதற்கு ஏராளமாக உள்ளதால் இத்துறையில் உள்ளவர் கற்பதை நிறுத்தக்கூடாது,” என்றார் பிரவீன்.

janark@sph.com.sg

Source: Tamil Murasu @SPH Media Limited. Permission required for reproduction.